பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

07 10 2023 6 30

தலைப்புச் செய்திகள்-

1. ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு குறைந்த வட்டியில் வீட்டுவசதி கடன் வழங்குவதை நடைமுறைக்கு கொண்டு வருவது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று உயர்மட்ட ஆலோசனை நடத்தினார்.

2. 70 சதவீதம் சிறு தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மாவு பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்,

3. மீனவர்களுக்கு கடன் அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா கூறியுள்ளார்,.

4. டெல்டா மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகள் விரைவில் அமைக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

5. ஆசிய விளையாட்டுப் போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட பதக்கங்களை குவித்துள்ள இந்திய வீரர்களுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி கடந்த ஆகஸ்ட் மாதம் தமது சுதந்திரதின செய்தியில் விடுத்த அறிவிப்புகள் குறித்து இன்று முக்கிய ஆலோசனை மேற்கொண்டார்.

ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு குறைந்த வட்டியில் வீட்டுவசதி கடன் வழங்குவதை நடைமுறைக்கு கொண்டு வருவது குறித்தும், வீடுகளுக்கு சூரியசக்தி மின்சாரம் வழங்குவதற்கான திட்டம் குறித்தும் பிரதமர் ஆலோசனை நடத்தினார்.

[]<<<>>>[]

70 சதவீதம் சிறு தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மாவு பொருட்களுக்கு சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து முற்றிலும் விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் இன்று நடைபெற்ற சரக்கு மற்றும் சேவை வரிக் குழுமத்தில் 52-வது கூட்டத்தில் உரையற்றிய அமைச்சர், 70 சதவீத சிறு தானியங்களை பயன்படுத்தி தயாரிக்கப்படும் மாவு பொருட்கள் பாக்கெட்களில் அடைக்கப்பட்டு லேபிள் ஒட்டப்பட்டிருந்தால் அவற்றிற்கு ஐந்து சதவீத ஜி எஸ் டி வரி விதிக்கப்படும் என்று தெளிவுபடுத்தினார்.

கரும்பிலிருந்து பெறப்படும் மொலாசஸுக்கான ஜிஎஸ்டி வரி 28 சதவீதத்திலிருந்து ஐந்து சதவீதமாக குறைக்கப்படுவதாகவும், இதனால் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிக அளவில் பயன்பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

ஜி எஸ் டி மேல்முறையீட்டு தீர்ப்பாய சட்டங்களில் திருத்தங்கள் கொண்டு வருவது குறித்து தெரிவித்த அமைச்சர், தீர்ப்பாயத்தின் தலைவருக்கான அதிகபட்ச வயது வரம்பு 67-லிருந்து 70-ஆக உயர்த்தப்படுவதாகக் கூறினார்.

இந்த தீர்ப்பாயத்தின் உறுப்பினர்களுக்கான வயது வரம்பு 67-ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மதுபானம் தயாரிப்புக்கான சமநிலைப்படுத்தப்பட்ட ஆல்ஹகாலுக்கு கூடுதல் வரி விதிக்க மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கப்படுவதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

விவசாயிகளுக்கு வழங்கப்படுவதைப்போல் மீனவர்களுக்கும் கடன் அட்டை வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் மல்லிப்பட்டினத்தில் சாகர் பரிக்கிரமா கடலோர ஆய்வுப் பணியை மீன்வளத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகனுடன் இணைந்து அவர் ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு பர்ஷோத்தம் ரூபாலா, பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு மீன்வளத்துறைக்கு 36 ஆயிரம் கோடி ரூபாய் செலவிட்டிருப்பதாகக் கூறினார்.

மீன்வளத்துறையின் பணிகள் விரிவாக்கம் செய்யப்பட்டு 13 செயல்பாடுகள் கொண்டுவரப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடல்பாசி வளர்ப்பு, வண்ண மீன்கள் வளர்ப்பு உள்ளிட்ட உபரி தொழில்களும் மீன்வளத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த அவர், நவீன தொழில்நுட்ப உத்திகளை மீன்பிடி தொழிலில் பயன்படுத்தவும், மீனவர்களுக்குத் தேவையான வசதிகளை செய்து தரவும் அரசு ஆர்வம் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இந்த செய்தியாளர் சந்திப்பில் பேசிய இணை அமைச்சர் திரு எல் முருகன், ராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர். நாகை மாவட்டங்களில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆழ்கடல் மீன்பிடி திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

மீனவர்களுக்கென தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கான நலத்திட்டங்கள் முழுவீச்சில் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

முன்னதாக ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் மத்திய மீன்வளத்துறை அமைச்சர்கள் ஆய்வுப் பணியை மேற்கொண்டனர்.

அப்போது பேசிய அமைச்சர் திரு பர்ஷோத்தம் ரூபாலா, மீன்பிடி தொழிலில் தமிழகம் முன்னணியில் திகழ்வதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தமிழக மீன்பிடி தொழில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் கூறினார்.

தொண்டியில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான பரிந்துரையை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

மீன்பிடி படகுகளை தயாரிப்பவர்கள், மீன்வலை பின்னுபவர்கள் உள்ளிட்டோருக்கும் விஷ்வகர்மா திட்டத்தின் கீழ் மானியத்துடன் கடனுதவி வழங்கப்படும் என்று திரு பர்ஷோத்தம் ரூபாலா தெரிவித்தார்.

[]<<<>>>[]

டெல்டா மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் விவசாயம் சார்ந்த தொழிற்சாலை விரைவில் அமைக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா தெரிவித்துள்ளார்.

இன்று திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் மத்திய அரசின் தீன்தயாள் உபாத்தியாயா திட்டம், மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் உள்ளிட்டவை இணைந்து நடத்திய வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து அவர் பேசினார்,

உலக அளவில் முன்னணியில் உள்ள தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சூழலை மாநில அரசு ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்தார்.

டெல்டா மாவட்டங்களில் விவசாயம் மட்டுமே வாழ்வாதாரத்தை வழங்கும் என்ற நிலையை மாற்றி, விவசாய விளை பொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்திட வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் விரைவில் அமைக்கப்படும் என்று திரு டி ஆர் பி ராஜா குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலத் திட்டங்களை அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு பொன்முடி தெரிவித்துள்ளார்.

விழுப்புரத்தில் இன்று நடைபெற்ற சமூக வளைகாப்பு விழாவில் தமிழக அரசின் ஊட்டச்சத்து பெட்டகத்தை கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கி அமைச்சர் பேசினார்.

பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருவதன் ஒரு பகுதியாகத்தான் இந்த சமுதாய வளைகாப்பு நடைபெறுவதாக அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் அனைத்து சமுதாய கர்ப்பிணி பெண்களும் உரிய மருத்துவ வசதியை பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளின் நலனை கருத்தில் கொண்டு மாநில அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருவதாக வனத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகே மாற்றுத்திறனாளிகளுக்கான மருத்துவ முகாமில், அவர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு அரசு உயர் முன்னுரிமை அளித்து, திட்டங்களை செயல்படுத்தி வருவதாகக் கூறினார்.

மாநில அரசு அவர்களுக்காக செயல்படுத்தி வரும் திட்டங்களையும் அமைச்சர் பட்டியலிட்டார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்கு பரவலாக மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் திரு செந்தாமரைக் கண்ணன் தெரிவித்துள்ளார்.

ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

பெரம்பலூர் மாவட்டம் தழுதாழை ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு துறையின் சார்பில் இன்று நடைபெற்ற கால்நடை வளர்ப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வு முகாமை மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற்ற கால்நடை சுகாதாரம் மற்றும் விழிப்புணர்வு சிறப்பு முகாமை சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு பிச்சாண்டி தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

கள்ளக்குறிச்சி மாவட்டம் கோமுகி அணையிலிருந்து பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு இன்று பாசனத்திற்காக தண்ணீரை திறந்து வைத்தார்.

**[]<<<>>>[]**

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி கோவிலுக்குச் செல்லும் ரோப்கார் சேவை வருடாந்திர பராமரிப்புப் பணிகள் முடிந்து இன்று சோதனை ஓட்டம் நடைபெற்றது.

**[]<<<>>>[]**

நீலகிரி மாவட்டத்தில் இரண்டாவது சீசனையொட்டி இன்று பழங்கால கார்களின் அணிவகுப்பு நடைபெற்றது.

**[]<<<>>>[]**

திருப்பத்தூரில் உடற்தகுதியை பேணுவது குறித்த விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

**[]<<<>>>[]**

ஆசிய விளையாட்டுப் போட்டியில் நூற்றுக்கு மேற்பட்ட பதக்கங்களை குவித்து சாதனை படைத்துள்ள இந்திய அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இப்போட்டியில் இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை 100-ஐ கடந்துள்ளது கண்டு நாடே மகிழ்ச்சியில் திளைப்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

ஒவ்வொருவரின் சாதனையும் நாட்டு மக்களுக்கு பெருமிதத்தை அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் போட்டியில் பங்கேற்ற அனைவருடனும் வரும் 10-ஆம் தேதி தாம் கலந்துரையாடவுள்ள நிகழ்ச்சியை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில், வீரர்கள் தங்களின் முழுமையான அர்ப்பணிப்பு, திறமையை வெளிப்படுத்தி இந்த மைல் கல்லை எட்டி சாதனை புரிந்துள்ளதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 38 வெள்ளி, 41 வெண்கல என மொத்தம் 107 பதக்கங்களை வென்று பதக்கப்பட்டியலில் தொடர்ந்து நான்காவது இடத்தில் நீடிக்கிறது.

சீனாவின் **Hangzhou**-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இன்று மட்டும் 6 தங்கம், 4 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

***End of News***